மாலிம்பட பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாலிம்பட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாலிம்பட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 310,687,237 தொகை இருப்பு ரூபா 573,443 தொகை பெற வேண்டிய மீதி ரூபா 87,456,375 ஊழியர் கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா 5,399,117 தொகை, முதலீடுகள் ரூபா 10,762,983 தொகை, முற்கொடுப்பனவு ரூபா 168,541 தொகை மற்றும் காசுக்கு சமமானவைகளும் ரூபா 25,618,341 தொகையாக மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 440,666,037 இற்கான தொகை காணப்பட்டதுடன், திரண்ட நிதியம் ரூபா 80,139,045 தொகை மூலதனச் செலவீட்டுக்கான அரசிறை உதவுத் தொகை ரூபா 309,948,597 தொகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 48,086,649 தொகையாக மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 438,174,291 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 2,491,746 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 301,952 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>(இ) மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,692,636 இற்கான செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.<br><br>(ஈ) முன்னைய ஆண்டின் போது ரூபா 459,304 இற்கான கடன்பட்டோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த வெலந்தகொட லுனுகொட பாதையின் பக்கச்சுவர் மறுசீரமைக்கும் நிர்மாண வேலை தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 291,115 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>(உ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகள் தொடர்பாக தீர்க்கப்பட்ட நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 781,087 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரஜகெவத்த திரு. லேனாட் அவர்களின் வீட்டுக்கு அண்மையிலுள்ள மதகு நிர்மாணித்தல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 224,249 தொகைக்காக நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.<br><br>(எ) சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை நாளதுவரையாக பெறுமதி மதிப்பீடு செய்து மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,378,526 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 99,019,782 தொகைக்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகள் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 834,685 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 9,740,481 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,822,688 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 421 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன், ஆண்டிறுதியில் உள்ளவாறு 161 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 165,848 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 42 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 29 கடையறைகளில் இருந்து ரூபா 726,940 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016-2021 இடைப்பட்ட காலப் பகுதியில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 கட்டிட விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களினால் அங்கீகரிக்கப்பட்டு இருக்காத போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும் நகர அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமல் 07 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், இந்த அங்கீகாரமின்றிய நிர்மாணவேலைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களில் அடங்கிய 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரூபா 1,927,376 இற்கான கட்டணம் அறவீடு செய்து நிர்மாண வேலையை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டின் பூர்த்தியான கிராமம் பொது மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் சபை நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகால் தயாரிக்கும் நிர்மாண வேலைகள் மற்றும் பக்கச் சுவர்கள் நிர்மாணிக்கும் 05 நிர்மாண வேலைகளுக்காக பதப்படுத்தப்பட்ட பலகை (Plywood) பலகை பயன்படுத்தி சட்டகங்கள் தயாரிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது சமமான வேலை விபரங்களுடனான விகிதம் என தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் CT-036 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 841 இற்கான விகிதத்துக்கு பதிலாக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 01 அங்குலம் (55mm) | 2020 ஆண்டின் பூர்த்தியான கிராமம் பொது மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதைகளை மதிப்பீடு செய்யும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட விலைகளின் படி மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்டது என. | பொருத்தமான மற்றும் அனுகூலமான விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கனத்தில் கிழிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பு பலகைகளை பயன்படுத்தி சட்டகங்கள் தயாரிப்பதற்காக ST-057 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,108 விகிதத்தை பயன்படுத்தியிருந்தமையால் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 267 வீதம் 592.83 சதுர மீற்றர்களுக்காக ரூபா 158,285 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்தியிருந்தது. | | |
| (ஆ) | 2020 ஆண்டின் பூர்த்தியான கிராமம் பொது மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கல்பமுன ஆதம்வத்த பாதையின் திரு ரன்ஜி அவர்களின் வீட்டிற்கு அண்மையில் இருந்து கொங்கிரீட் பரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்குரிய நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதையின் நீளம் 178 மீற்றர் மற்றும் அகலம் 2.4 மீற்றர் என அளவைப் பத்திரத்தில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதையின் மொத்த நீளம் 161.7 மீற்றர் காணப்பட்டமையால் 16.7 மீற்றர் தொகைக்காக கொங்கிரீட் 5.01 கனமீற்றர்களுக்காக ரூபா 86,312 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |